**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண்.427/2017 பி.வா.சா.2 அபர்ணா

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 27.03.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் என் தாயார் 2 ம் பிரதிவாதி பானுமதிக்காக சாட்சியம் அளிக்க வந்து உள்ளேன் என்றால் சரிதான். நான் அவரது அதிகாரம் பெற்ற முகவர் ஆவேன். இவ்வழக்கில் வாதி என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்றால் வாதி தான் தான் A.C. சின்னதுரையின் மனைவி என்றும் நாங்கள் வாரிசு சான்று வைத்து எந்த வில்லங்கமும் கோரக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரியுள்ளார்.

2) 1 ம் பிரதிவாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் அவர் என் தந்தையின் தாயார் ஆவார். அவர் எப்போது இறந்தார் என்றால் கடந்த டிசம்பர் 2019 ல் இறந்தார். வாதிக்கும் சின்னதுரைக்கும் 1976 ல் திருமணம் ஆனது பிறர் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றும் அச்சமயம் நான் பிறந்திருக்கவில்லை என்றும் சொன்னால் சரிதான். என் சாட்சிய வாக்குமூல விவரங்கள் என் தாயார் , கணவர் முதலிய பிறர் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றும் அந்த விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றும் சொன்னால் சரிதான். என் தாயாரும் எனது வழக்கறிஞரும் சொன்னதன் பெயரில் தான் மேற்படி விவரங்கள் எனக்கு தெரியும்.

3) என் பிறந்த தேதி என்ன என்றால் 24-08-1993 ஆகும். என் தாயாரின் திருமணத்தை காட்டும் விதமாக அழைப்பிதழோ , திருமண சான்றோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு அழைப்பிதழ் ஏதும் அடிக்கப்படவில்லை. திருமணம் பதிவு செய்யப்படவில்லை. பெரியோர் முன்னிலையில் திருமணம் நடைப்பெற்றது.

4) நாங்கள் பெற்ற சின்னதுரையின் வாரிசு சான்றில் யார் யார் பெயர் இடம்பெற்றுள்ளது என்றால் பத்மாவதி, பானுமதி மற்றும் என் பெயர் அபர்ணா இடம் பெற்றுள்ளது. சின்னதுரைக்கும் வாதிக்கும் பிரியா என்ற ஒரு பெண் குழந்தை 1981 ல் பிறந்தார் என்றால் சரிதான். நாங்கள் முறையாக வாரிசு சான்று பெற முயன்றிருந்தால் மேற்படி பிரியா பெயரையும் சேர்த்தே தாக்கல் செய்து இருப்போம் என்றும் என் தந்தையின் முதல் திருமணத்தை மறைத்து என் தாயாரை தான் அவர் முதலாவதாக திருமணம் செய்தது போன்று போலியான விவரத்தை குறிப்பிட்டு வாரிசு சான்று பெற்று உள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல.

5) 04-07-2007 தேதியிட்ட பி.வா.சா.ஆ. 6 பாக சாசனத்திலேயே மேற்படி பிரியா உடன் நான் பாகப்பிரிவினை செய்து உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பிரியா இருப்பது தெரிந்து இருந்துமே அவரை சேர்க்காமல் நாங்கள் வாரிசு சான்று கோரி மனு தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. எங்கள் மனுவில் பிரியா பெயரையும் சேர்த்து தான் தாக்கல் செய்து இருந்தோம் ஆனால் வட்டாட்சியர் விசாரணைக்கு பின் பிரியா பெயரை விடுத்தே வாரிசு சான்று வழங்கினார். பிரியா பெயர் எதற்காக விடுக்கப்பட்டது என எங்களுக்கு தெரியாது. வாரிசு சான்று மனுவில் பிரியா பெயரை சேர்க்காமல் சேர்த்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும் மேற்படி சாட்சியம் பொய்சாட்சியம் என தெரிய வந்தால் என் மீது குற்ற நடவடிக்கை எடுக்க இயலும் என்றும் சொன்னால் நாங்கள் ஆவணங்கள் கொடுத்தோம் மனுவை என் பாட்டி தான் கொடுத்தார் என்பதால் அதில் பிரியா பெயர் இருந்ததா என தெரியவில்லை.

6) பி.வாசா.ஆ. 10 OP பதிவேடு Extract ஐ தாக்கல் செய்துள்ள நிலையில் HMOP 90/1986 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு ஏதும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தேவை ஏற்படின் தாக்கல் செய்வேன். மேற்படி வழக்கில் விவாகரத்து உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை என்றும் உத்தரவு நகல் தாக்கல் செய்யாத போது மேற்படி பி.வா.சா.ஆ. 10

ஆவணம் வாதியை கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு எந்த விவரமும் நேரடியாக தெரியாது என்பதாலும் பிறர் சொல்லி தான் விவரம் தெரிந்து சாட்சியம் அளிப்பதாலும் என் சாட்சியம் ஏற்புடையது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. 2000 ம் ஆண்டுக்கு பிறகு நடந்த விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியும் . வாதிக்கு வழக்கு பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**ஒப்பம்/-( மு.ச. ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி